# தமிழ்நாட்டுக்கு அநீதி இழைக்கும் மோடி அரசு!

**தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பிரதமர் மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் பிப்ரவரி - 8ஆம் தேதியன்று மாநிலம் முழுவதும் நடைபெறும் என்று கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

**2014 ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு அமைந்தது முதல் பாசிசத் தன்மை கொண்ட ஒரு ஒற்றை ஆட்சியை உருவாக்குவதற்கான முன் திட்டத்தோடு செயல்பட்டு வருகிறார்கள். 'ஒரே நாடு' என்ற முழக்கத்துக்குப் பின்னால் இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைக்கும் அனைத்துச் செயல்களையும் வரிசையாகச் செய்து வருகிறார்கள். ஒரே மொழி - ஒரே மதம் - ஒரே பண்பாடு - ஒரே உணவு என்பது 'ஒரே தேர்தல்' என்று வந்துநிற்கிறது.**

**ஒரே கட்சி - பா.ஜ.க. - ஒரே அதிபர் - மோடி என்பதை உருவாக்குவதற்காக தந்திரமாகத் தான் இது அமையப் போகிறது என்பதை கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகிறார்கள். பாசிச - சர்வாதிகார - எதேச்சதிகாரச் சிந்தனை கொண்டவர்கள் காதில் ஏதும் விழாது என்பதற்கு ஏற்ப ஒன்றிய பாஜக அரசு நடந்து கொள்கிறது. இதனை நாடாளுமன்றத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பலப்படுத்தி வருகிறார்கள். மக்கள் மன்றத்திலும் இவை ஒலிக்க வேண்டும் என்பதற்காகத் தான் மாநிலம் முழுவதும் கண்டனப் பொதுக்கூட்டத்தை கழகத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.**

## ஓரவஞ்சனை அறிக்கை



"ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஓரவஞ்சனைதானா? தமிழ்நாடு என்ற பெயர்கூட தொடர்ந்து இடம்பெறுவதில்லையே? எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தோமே, அதில் ஒன்றைக்கூடவா உறுதிசெய்து அறிக்கையில் சேர்க்க மனம் வரவில்லை?" என்று வேதனையோடு கேட்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை அறிவிப்பு இல்லை. நதிநீர் இணைப்புத் திட்டம் இல்லை. கல்வித் துறைக்கு புதிய திட்டம் இல்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் இல்லை. ரயில்வேக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளது. காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீடு என்பது எல்.ஐ.சி.யை ஒழிக்கும் திட்டமாகவே பார்க்க வேண்டும். மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு தர வேண்டிய நிதியைத் தரவில்லை. எந்த மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறதோ அந்த மாநிலத்துக்கு ஏதாவது சில திட்டங்களை அறிவிப்பதும், தேர்தல் முடிந்ததும் அதை மறந்து விடுவதும் தான் பாஜகவின் பட்ஜெட் பாணி ஆகும்.

## இயற்கைப் பேரிடருக்கே உதவுவது இல்லை



ஃபெஞ்சல் புயலானது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைக் குறிப்பிட்டு, தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு 6,675 கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடுகள் செய்யப்பட்டு, நிதி விடுவிப்புக் கோரிக்கை ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்தவொரு நிதியையும் ஒன்றிய அரசானது விடுவிக்கவில்லை.

கடந்த நிதியாண்டில், மிக்ஜாம் புயல் தாக்கியது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் அதிகனமழைப் பொழிவு ஏற்பட்டது. இந்த இரண்டு பேரிடர்கள்ஏற்பட்ட பின்னரே, மிகச் சொற்பமான 276 கோடிரூபாயை, அதுவும் நான்குமாத தாமதத்திற்குப்பின்னரே ஒன்றிய அரசு அனுமதித்தது. இது, மாநிலஅரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒருசதவீதம்கூட இல்லை.

தமிழ்நாட்டுக்கு வெள்ள நிவாரணநிதியை வழங்காத ஒன்றிய அரசுக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி நீதிமன்றம் சென்றோம். எந்த நிதியும் வழங்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தி வருவது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று கூறி அந்த வழக்கை தமிழ்நாடு அரசு தொடர்ந்தது. இடைக்கால நிவாரணமாக 2,000 கோடி ரூபாயை வழங்க உத்தரவிட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசின் மனுவில் கோரப்பட்டிருந்தது. இதன்பிறகுதான் ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரண நிதியை அறிவித்தது.

நிதி நெருக்கடியில் இருந்த போது தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதியில் இருந்து நிவாரண உதவிகளையும் பணிகளையும் மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாகவும், உட்கட்டமைப்புகளை மறுசீரமைக்கவும் தமிழ்நாடு அரசு மாநிலப் பேரிடர் நிதியில் இருந்து இதுவரை 2,477 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

## நிதிக்குழுவிடம் முதலமைச்சர் வைத்த கோரிக்கை என்ன?




மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு பகிர்ந்தளிக்கும் வரி வருவாயை 32 விழுக்காட்டில் இருந்து 42 விழுக்காடு ஆக்க 14 ஆவது நிதிக்குழு பரிந்துரை செய்தது. இதனை 41 விழுக்காடாக 15 ஆவது நிதிக்குழு பரிந்துரைத்தது. இதனை 50 விழுக்காடு ஆக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16 ஆவது நிதிக்குழுவிடம் கோரிக்கை வைத்து இருந்தார்.

" சமச்சீரான வளர்ச்சியையும், திறமையான நிர்வாகத்தையும் இந்த வரிப் பகிர்வு முறையில் சமக்குறிகோள்களாகக் கருதி இந்த நிதிக் குழு தனது பரிந்துரைகளை வழங்கும் என்றுநம்புகிறோம். நாட்டின் சமச்சீரான வளர்ச்சியைஎதிர்நோக்கும் வகையில் வளர்ச்சி குன்றியபகுதிகளுக்கு தேவையான நிதியை வழங்குவதுஅவசியம் என்றாலும் அதே வேளையில், பல்வேறுவகையிலும் சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பதன் மூலமாகவே அவற்றின் வளர்ச்சியைத் தக்கவைப்பதுடன் அந்த மாநிலங்களின் வளர்ச்சிப்பாதைக்கும் வழிவகுக்க முடியும், என்பதையும் நிதிக்குழு கவனத்தில் கொள்ள வேண்டும். சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கானநிதியைக் குறைத்து வளர்ச்சியை எதிர்நோக்கும்பகுதிகளுக்கு நிதி ஆதாரங்களைமடைமாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டின்வளர்ச்சி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய மாநிலங்களுக்கு இறுதியாக கிடைக்கும் வரிப்பகிர்வும் குறைந்துவிடும் என்பதே உண்மை" என்றும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரின் வாதங்களைக் கேட்ட 16 ஆவது நிதிக்குழுவின் தலைவர் அரவிந்த் பனகாரியா, "தமிழ்நாடுஅரசின் சார்பில் Masterclass Presentation செய்யப்பட்டிருக்கிறது" என்று பாராட்டினார். "இதுவரை 12 மாநிலங்களுக்குச் சென்றுள்ளோம். ஆனால் தமிழ்நாடு அரசு எங்களுக்கு அளித்த விளக்கம் தான் இதுவரை அளிக்கப்பட்ட விளக்கங்களில் மிகச் சிறந்தது" என்று அரவிந்த் பனகாரியா சொன்னார். நிருபர்கள் கூட்டத்தில் பாராட்டினார்.

## நழுவும் நிர்மலா சீதாராமன்



" ஒன்றிய அரசு பகிர்ந்தளிக்கும் வரியில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை 16 ஆவது நிதிக்குழுவிடம் மாநிலங்கள் பதிவு செய்யலாம். வரிப் பகிர்வு சதவீதத்தை மாற்றியமைக்கக் கோரும் தென் மாநிலங்கள் நிதிக்குழுவிடமே தங்கள் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்" என்று தனது கடமையில் இருந்து நழுவி தப்பிக்கப் பார்க்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

"மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாய் கணக்கீடுகளை ஒன்றிய அரசு முடிவு செய்வதில்லை. இவை நிதிக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையிலே முடிவு செய்யப்படுகின்றன" என்று சொல்வதன் மூலம் தனது பொறுப்பை தட்டிக் கழிக்கிறார் நிர்மலா. நிதிக்குழு சொன்னால் இவர்கள் செய்து தந்துவிடுவார்களா?

மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு பகிர்ந்தளிக்கும் வரி வருவாயை 41 விழுக்காடாக 15 ஆவது நிதிக்குழு வரையறுத்தது. ஆனால் இவர்கள் கொடுத்தது 33.16 விழுக்காடு மட்டும் தான். அதாவது நிதிக்குழு சொன்னாலும் தராதவர்கள் தான் பாஜக ஆட்சியாளர்கள். பிறகு ஏன் பழியை நிதிக்குழு மீது போட்டு தப்பிக்க வேண்டும்?

## தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்க முடியாது



நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் கடந்த 31.1.2025 அன்று 2024 - 25ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் தமிழ்நாடு அரசின்பல்வேறுசாதனைகளுக்குபாராட்டுதல்கள்சொல்லப்பட்டுள்ளது. அந்தளவுக்கு தமிழ்நாடு பல்வேறு வழிகளில் வளர்ந்து வருகிறது.

1. தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக இருக்கிறது.

2. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.

3. பொருளாதாரக் குறியீடுகள் அனைத்திலும் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது.

4. மருத்துவம், கல்வி, சமூக நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக இருக்கிறது.

5. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளது.

6. கட்டணமில்லாத மகளிர் விடியல் பயணமானது, மகளிரின் சேமிப்பை அதிகரித்துள்ளது. சமூகத்தில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்துள்ளது.

7. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பள்ளிக் குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரித்துள்ளது. அவர்களது கவனிக்கும் திறனை மேம்படுத்தி உள்ளது.

8. புதுமைப் பெண் திட்டத்தால் மாணவியரின் உயர்கல்விச் சேர்க்கை அதிகரித்துள்ளது.

9. நான் முதல்வன் திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி வழங்குவதால் இந்தியாவின் திறன்மிக்க இளைஞர்களின் தலைநகரமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது. இதில் பயிற்சி பெற்ற 2.58 லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பை உடனே பெற்றுள்ளார்கள்.

10. இந்தியாவில் வலிமைமிக்க விளையாட்டு மையமாக தமிழ்நாடு வளர்ந்துவிட்டது.

11.ஆண்டுதோறும் 15 லட்சம் பேர் உயர்சிகிச்சை பெற தமிழ்நாடு வரும் அளவுக்கு மருத்துவத் தலைநகராக தமிழ்நாடு திகழ்கிறது.

12. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருதைப் பெற்றுள்ளது.

13.தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பன்முக வறுமைக் குறியீடுகளின் கீழ் 2.2 விழுக்காடு மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 14.96 விழுக்காட்டை விட மிகமிகக் குறைவு ஆகும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை அரசு தொடங்க உள்ளது.

14.அமைதியான மாநிலமாக இருப்பதால் பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில் 41 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர்.

15. கடந்த மூன்று ஆண்டுகளில் 10 லட்சம் கோடிக்கும் மேலான தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது சிந்தனைத் திறத்தால் உருவான திராவிட மாடல் கொள்கை கொண்ட தமிழ்நாட்டின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கெடுக்கவே நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை - ஆளுநரின் அத்துமீறல்கள் - நீட் தேர்வு - பல்கலைக் கழகங்களைச் சிதைப்பது - இந்தி மொழித் திணிப்பு - மாநில உரிமைகளுக்குள் நுழையும் சட்டங்கள் ஆகியவற்றைச் செய்கிறது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு ஒரே மருந்து கலைஞரின் மருந்துதான்.

தலைவர் கலைஞர் உருவாக்கிக் கொடுத்த 'மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி' என்ற தத்துவத்தை வென்றெடுக்க உறுதி கொண்டு செயல்பட வேண்டும்.

## நிதியில் நீதி வேண்டும்




இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இன்று வளர்ந்து நிற்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.87 விழுக்காடு என்ற அளவில் தமிழ்நாடு பங்களிப்பினை வழங்குகிறது. 2030ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தினை அடைவதற்கான பெருங்குறிக்கோளினை தமிழ்நாடு இலக்காக நிர்ணயித்துள்ளது.

இத்தகைய மாநிலத்துக்கு ஒன்றிய அரசு பகிர்ந்தளிக்கும் நிதியின் அளவு தொடர்ந்து குறைவாகவே இருந்து வருகிறது. தமிழ்நாடு, ஒன்றிய அரசுக்கு வரியாக ஒரு ரூபாய் அளித்தால், 29 பைசாதான் திரும்பக் கிடைக்கும். ஆனால், உத்தர பிரதேசத்திற்கு 2 ரூபாய்க்கு மேல் கிடைக்கும். தமிழ்நாட்டில் இருந்து வசூலித்த அதிக நிதி என்ன ஆனது? அதனால் நமக்கு எந்த பயனும் ஏற்படாத நிலையில் நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது.

## புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு



ஒன்றிய அரசானது தமிழ்நாடு அரசை தொடர்ந்து புறக்கணித்தும் வஞ்சித்தும் வருகிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசானது, மாநில அரசின் கொள்கை களுக்கு எதிரான நிபந்தனைகளை விதித்து, அத்திட்டங்களைச் செயல்படுத்து வதில் சிரமங்களை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல், அத்திட்டங்கள் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது.

1. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ் ஒன்றிய அரசிடம் இருந்து வர வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதி நிலுவையில் உள்ளது. ஆசிரியர்களின் ஊதியம், பள்ளிகள் பராமரிப்பு ஆகியவற்றுக்கு இது முக்கியமான நிதி ஆகும். இதுவரையில் மானிய உதவித் தொகையை விடுவிக்கவில்லை. புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசுதிணிப்பதால், இத்திட்டங்களும் தற்போது முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

2 ஒன்றிய அரசு வீடுதோறும் குடிநீர் (Jal Jeevan Mission) என்ற திட்டத்தை வைத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ்வழங்கவேண்டிய 4,142 கோடி ரூபாயில், 732 கோடிரூபாயை மட்டுமே வழங்கியுள்ளது. நிதியின்மையினால் திட்டங்களின் செயல்பாடு சுணங்கக் கூடாது என்பதால் நாம் நிதியை கொடுத்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

3. ஒன்றிய அரசின் திட்டமான பிரதமர் நகர்ப்புர வீட்டுவசதித் திட்டத்தின் (PMAYU), கீழ் வழங்கப்படும் மானியத்தொகையானது, 1.5 இலட்சம் ரூபாயாகவே இருக்கிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திவரும் தமிழ்நாடு அரசானது, வீடு ஒன்றிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாயை தன்சொந்த நிதியின் மூலம் மானியமாகக் கொடுத்து, ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களின் சொந்த வீட்டிற்கான கனவினை நிறைவேற்றியுள்ளது.

4. ஒன்றிய அரசின் பிரதமர் ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் (PMAYG) கீழ்வழங்கப்படும் மானியத் தொகையானது, வீடு ஒன்றிற்கு 0.72 இலட்சம் ரூபாயாக, எட்டு வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு அரசு, வீடு ஒன்றிற்கு 1.72 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கி வருகிறது. நமது அரசு செயல்படுத்திவரும் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ், மாநில அரசின் மானியமானது 3.53 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இது, ஒன்றிய அரசு தன்னுடைய திட்டத்திற்கு வழங்கும் மானியத்துடன் ஒப்பிடுகையில் ஐந்து மடங்கு அதிகம்.

ஒன்றிய அரசு தன்னுடைய திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியினை தமிழ்நாடு அரசின் மீது திணிப்பதால், மாநில அரசின் முன்னுரிமைத் திட்டங்களுக்குப் போதிய நிதியளிப்பு இல்லாமல் போகிறது. இதுதான் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு வழங்கும் நிதி நிலைமை ஆகும்.

- ப.திருமாவேலன்